/



குகை நமச்சிவாயா

# குகை நமச்சிவாயா

## குகை நமச்சிவாயா

## GUHAI NAMACHIVAYA

(Parts of this article were first published in *The Mountain Path*, 1990, pp. 115-23
இந்த கட்டுரையின் சில பகுதிகள் முதலில் மலை வழி -1990, பக். 115-23 என்ற இதழில் வெளியாயிற்று)

மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்
-----------------------
டேவிட் காட்மன்
(DAVID GODMAN)

தமிழ் மொழி பெயர்ப்பு
------------------------
சாந்திப்பிரியா
(SANTHIPRIYA)
(nrj_1945@yahoo.com)

இரமண மகரிஷி சுமார் பதினைந்து ஆண்டுகள் வசித்து வந்த விருபாக்ஷா குகை, அருணாசல மலையின் அடிவாரத்தில் சுமார் நூறு மீட்டர் கீழ் பகுதியில் உள்ளதை கவனித்து இருக்கலாம். கோபுரத்தின் கிழக்குப் பகுதி வழியே உள்ளே இருந்து செல்ல வேண்டிய இந்த குகையில்தான் பல நூற்றாண்டுகள் முன்பாக குகை நமச்சிவாயா என்ற யோகி இருந்து வந்தார். அந்த குகை மற்றும் அதன் சுற்றுப்புற கட்டிடங்கள் அவர் பெயரில் அமைந்து உள்ளன.

கி.பி 1548 ஆம் ஆண்டு கர்னாடகாவில் ஒரு சைவ பிரிவை சேர்ந்த பெற்றோர்களுக்கு மகனாகப் பிறந்தவரே குகை நமச்சிவாயா என்பவர். அவரைக் குறித்து கூறப்பட்டு உள்ள வரலாற்று இலக்கியங்களின்படி அவர் மிகச் சிறு வயதிலேயே தெய்வீக நாட்டம் கொண்டு, நன் நடத்தையுடன் இருந்து வந்தார். படிப்பில் நாட்டம் இன்றி, உலகப் பற்றும் இன்றி இருந்து கொண்டு இருந்த அவர் தமது இளமைப் பருவத்திலேயே கடவுளின் கருணையைப் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் அங்கும் இங்கும் அலைந்து கொண்டு இருந்தவர் முடிவாக ஸ்ரீ சைலத்தில் இருந்த சிவானந்த தேசிகர் என்பவரிடம் சிஷ்யனாகச் போய் சேர்ந்த பின் அவருக்கு தன்னலமற்ற சேவை செய்து வரலானார்.

சிவானந்த தேசிகர் வீர சைவப் பிரிவைச் சேர்ந்தவர். அவர்களுக்கு என தனிப் பட்ட பழக்க வழக்கங்கள் உண்டு. குகை நமச்சிவாயா அப்படிப்பட்ட பழக்க வழக்கங்களைக் கொண்ட வீர சைவ பிரிவினரிடம் சிஷ்யனாக இருந்ததினால் அவர்கள் கொண்டிருந்த பழக்க வழக்கங்கள் என்ன என்பதை முதலில் தெரிந்து கொள்வது முக்கியம் ஆகும்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில், சைவ பிரிவில் இருந்து வெளியேறிய சிலர் வீர சைவப் பிரிவைத் தோற்றுவித்தனர்.



குகை நமச்சிவாயா ஆலயத்தின் மேல் பகுதியில் உள்ள கோபுரம்

பக்கம்
2

குகை நமச்சிவாயா

GUHAI NAMACHIVAYA

இருபத்தி எட்டு சைவ அகமங்களின் அடிப்படையில் அதன் தத்தவங்கள் அமைந்து இருந்தன. வீர சைவப் பிரிவினர் லிங்கா அதாவது சைத்தன்யா என்ற ஆன்மீக விழிப்புணர்ச்சியை முக்கியமாகக் கருதியவர்கள். சிவனடியார்களான அவர்கள் லிங்காயத் என்றும் அழைக்கப்பட்டனர். அவர்களுடைய தத்துவார்த்தத்தின்படி உபனிஷத்துக்களில் கூறப்பட்டு உள்ள பரமாத்மன் என்பதின் ரூபம் லிங்கம் ஆகும். பிரபஞ்சத்தில் ஆன்மீக விழிப்புணர்வை தந்து கொண்டிருக்கும் உருவற்ற அதன் உருவத்தை லிங்க வடிவத்தில் பார்த்தனர். வீர சைவத்தினர் லிங்கத்தின் அனைத்து ரூபங்களையும் வழிபட்டனர். அருணாசலாவில் குகை நமச்சிவாயா வாழ்ந்து கொண்டு இருந்த பொழுது அவரை கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த நெருப்புப் போன்ற ஒளிப் பிழம்பு போன்றவர் என்றே கருதினர்.

வுாழ்வின் இறுதியில் சிவ பெருமானுடன் ஐக்கியமாகி விட வேண்டும் என்பதே அவர்களுடைய வாழ்வின் முக்கியமான குறிகோள். எவர் ஒருவர் அப்படிப்பட்ட நிலைக்குச் சென்று விட்டாரோ அவரையே குருவாக ஏற்றுக் கொண்டு அவருக்கு சிஷ்யனாகி பணிவிடைகள் செய்து கொண்டு வந்தால் அந்த லட்சியத்தை தாமும் எட்ட முடியும் என்பது அவர்களுடைய திடமான நம்பிக்கை.

எந்த ஒருவன் அப்படிப்பட்ட குருவைக் கண்டு பிடித்து அவரிடம் சென்று தீட்சை பெறுகின்றானோ அந்த நேரத்தில் இருந்து வீர சைவான அவனுடைய ஆன்மீக பயணம் துவங்கி விடுகின்றது. சாதாரணமாக ஒருவருடைய குரு, சுமார் ஒரு வருட காலம் அவனுடைய ஆன்மீக ஈடுபாட்டின் தன்மையை பல்வேறு நிலைகளிலும் சோதித்துப் பார்த்தப் பின்னரே அவனுக்கு தீட்சைக் கொடுத்து சிஷ்யனாக ஏற்பார். அப்படி சக்தி கொடுக்கையில் அவனுடைய உடலின் உள்ளே இருக்கும் மூன்று நிலைகளிலும் லிங்க சக்தியை செலுத்துவார். இதை வீரசைவர்கள் மாலா என்று அழைக்கின்றனர். அதுவே அவனை தூய்மைப் படுத்தும் முதல் கட்டம் ஆகும்.

குரு தன்னுடைய கைகளை அவனுடைய தலை மீது வைத்து அவன் ஆத்மாவுடன் கலந்துள்ள உள்ள பாவலிங்கா என்ற



குகை நமச்சிவாயா ஆலயத்தின் மேல் பகுதியில் உள்ள கோபுரம்

**பக்கம் 3**

உணர்வில் இருந்து மேன்மையான நான் என்ற ஆத்ம விழிப்புணர்வை வெளிக் கொண்டு வருகின்றார். அதே சமயத்தில் அவனுக்குள் அவனை அறியாமலேயே தீய உணர்வுகள் ஊடுறுவி இருந்தால் அதையும் அழிக்கின்றார். அடுத்து அவன் வலது காதில் நமச்சிவாயா என்ற தாரக மந்திரத்தை ஓதுகின்றார். அப்படி ஓதப்படும் அந்த மந்திரத்தை அனைத்து சைவப் பிரிவினரும் ஒப்பற்ற மந்திரம் என்றே நினைக்கின்றனர். காதில் ஓதும் அந்த வார்த்தைகள் உள்ளுக்குள் மெல்லிய இழை போல ஊடுறுவி பிராணலிங்கா என்ற லிங்க நிலையை நிலைபடுத்துகின்றது.

அந்த மந்திரத்தின் சக்தி என்ன எனில் உள்ளத்தைத் துாய்மைபடுத்தி உள்ளத்துக்குள் இருக்கும் தீய உணர்வுகளை அழிக்கின்றது. அந்த முக்கியமான சடங்கு முடிந்ததும் அவனிடம் ஒரு சிறிய லிங்கம் தரப்படுகின்றது. அந்த லிங்கத்தின் சக்தி ஒளி பாய்வது போல இருதயத்தில் சென்று, உள்ளத்திற்குள் ஊடுறுவி, ஆன்மீக விழிப்புணர்ச்சியை தந்து, ஒரு குரு தன்னுடைய சிஷ்யனிடம் என்ன எதிர் பார்க்கின்றாரோ அதை நிறைவேற்றும் வகையில் அவனுள் மாற்றத்தைக் கொண்டு வருகின்றது.

ஒரு குருவானவர் அவனுக்கு லிங்கம் ஒன்றைத் தரும் அந்த கடைசி சடங்கின் பொழுது அவனுக்குள் உள்ள லிங்க சக்தியை எடுத்து அந்த லிங்கத்தில் அதை உரு ஏற்றி அதை அவனுடைய இஷ்ட லிங்கமாக்கித் தர அவன் அதை சிவனாகவே நினைத்து வழிபடத் துவங்குகின்றான். அந்த இஷ்ட லிங்கத்தைப் பெறும் பொழுதே அவனுடைய பாபச் செயல்களினால் ஏற்பட்டிருந்த தீய வினைப் பலன்கள் விலகி விடுகின்றன.

இஷ்ட லிங்கத்தை தன் உடல் மீது எப்பொழுதும் பட்டுக் கொணடே இருக்கும்படி போட்டுக் கொண்டு ஒரு நாளைக்கு மூன்று வேளைகள் அதை வழிபட வேண்டும் என குரு அந்த சிஷ்யனிடம் சொல்வார். அந்த லிங்கத்தை எந்த நிலையிலும் அவன் தன் உடலில் இருந்து எடுத்து விடக் கூடாது என்றும் அப்படி ஒரு வேளை அதை எடுத்து விட்டால் அன்றே அவன் ஆன்மீகத்தில் மரணம் அடைந்து விட்டதாகக் கருதப்படுவான் என குரு அவனிடம் எச்சரிப்பார். வீரசைவர்கள் எந்த நிலையிலும் இஷ்ட லிங்கத்தையோ, அவர்களுடைய குருவின் சமாதி மீதுள்ள



குகை நமச்சிவாயா ஆலயத்தின் மேல் பகுதியில் உள்ள கோபுரம்

லிங்கத்தையோ தவிற வேறு எதையும் வணங்குதல் ஆகாது என்பதினால்தான் அவர்கள் மற்ற ஆலயங்களில் உள்ள சிவ உருவ வழிபாட்டைத் தவிர்த்து விடுகின்றனர்.

குகை நமச்சிவாயா அப்படிப்பட்ட கட்டுக் கோப்பான விதி முறைகளைக் கொண்ட தீட்சையை இளம் வயதிலேயே பெற்று விட்டிருந்தார். அந்த காலத்தில் அப்படிப்பட்ட தீட்சைகள் எட்டு வயதில் பெறப்படுவது என்பது ஆச்சரியமான விஷயம் அல்ல. சிவானந்த தீட்சதர் வீர சைவர்களின் சிவ யோகம் என்ற கலையில் வல்லுனர். சிவானந்த தீட்சதர் குகை நமச்சிவாயாவை முதிர்ந்த அறிவு மிக்க சிறுவனாகப் பார்த்ததினால் அவருக்கு தீட்சை தரச் சம்மதித்தார். அது முதல் குகை நமச்சிவாயா குருவிற்கான உடலளவிலான சேவை மற்றும் சிவ யோகக் கலை இரண்டையுமே தவறாமல் செய்து கொண்டு இருக்க விரைவிலேயே அவர் சிறந்த சிவ யோகியாக மாறினார்.

## பக்கம் 4

சிவயோகம் என்பது பதஞ்சலீ இராஜ யோகத்தின் கடைசி மூன்று நிலைகளை கொண்டு அமைந்த தாரானா, தியானா, பாவா போன்றவற்றுக்கு முக்கியத்துவம் தந்தாலும் ஒருவனுடைய உள்ளத்தில் ஊடுருவி இருந்த மூன்று நிலைகளிலும் குரு செலுத்தி இருந்த லிங்கத்தை தியானிப்பதே முக்கியமான ஒன்றாகக் கருதப்பட்டது.

சிவயோக முறை பயிற்சியில் முதலில் குரு தந்த இஷ்ட லிங்க வழிபாட்டை தாரனா எனவும், உள்ளுக்குள் செலுத்தப்பட்ட பிராண லிங்க வழிபாட்டை தியானா எனவும் மற்றும் அவர் வெற்று உடலுக்குள் செலுத்திய பாவ லிங்க வழிபாட்டை சமாதி என்றும் அழைத்தனர். மக்கேய மாயிதேவா (**Maggeya Mayideva**) என்ற வீரசைவ துறவியின் கூற்றின்படி வெளித் தெரிந்த ஒளி வெள்ளத்தையும் ஒருவருடைய மனதுக்குள் உள்ள லிங்கத்தையும் தியானித்தபடி அமர்ந்துள்ள நிலையே சமாதி என்பது ஆகும்.

**குகை நமச்சிவாயா**

**GUHAI NAMACHIVAYA**

யோக வழிபாட்டை எப்படி செய்ய வேண்டும் ?. “ இடது கையில் இஷ்ட லிங்கத்தை வைத்திருக்க வேண்டும். உடலின் மற்ற உறுப்புக்களின் இயக்கத்தை நிறுத்தி விட்டு மூச்சை இறுகப் பிடித்து வைத்திருந்து பிராணாயமா செய்து, மனதையும் கட்டுப் படுத்தி வைத்து இஷ்ட லிங்கத்தை கண்களால் பார்த்திருந்தபடி



குகை நமச்சிவாயா ஆலயத்தின் மேல் பகுதியில் உள்ள கோபுரம்

**பக்கம் 5**

**குகை நமச்சிவாயா**

**GUHAI NAMACHIVAYA**

பிராணாயமாவின் மீது தன் மனக் கண்ணை வைத்திருந்து, மன உணர்வுகளை பாவலிங்கத்தின் மீது செலுத்தி மூன்று லிங்க நிலைகளையும் ஒன்றாக்கி வைத்திருக்க ஒருவன் நான் என்ற நிலையை எட்டுகின்றான்.

சிவ யோகம் என்பதின் லட்சியமே ஒருவனுடைய இருதயத்திற்குள் சிவபெருமானுடைய எண்ணங்களை ஆழமாக எழச் செய்வதுதான். ஒரு விதத்தில் பார்த்தால் பக்தி எனும் போர்வையில் அமைந்து உள்ள சிவயோகமும் குண்டலினி யோகம் போன்றதுதான். சிவயோகத்தின் லட்சியமே தன்னை கடவுளுடைய சக்தியுடன் இணைத்துக் கொள்வதே ஆகும். அது எப்படி நடைபெறுகின்றது என்றால் உடலுக்குள் உள்ள சூஷ்மத்தில் ஊடுறுவிச் செல்லும் பிராணா என்பது ஆறு சக்கர நிலைகளையும் கடந்து சென்று தலையில் உள்ள பிரும்மாந்திராவை அடைகின்றது. மாபெரும் சிவ யோகிகள் மரணம் அடையும் முன்னர் தங்களுடைய அனைத்து பிராணா சக்திகளையும் பிரும்மாந்திராவுக்குச் செலுத்தி அங்கு ஊடுறுவி உள்ள சிவ உணர்வுகளுடன் கலந்து விடுகின்றனர்.

குகை நமச்சிவாயும் இப்படிப்பட்ட யோக கலையை பல ஆண்டுகள் கற்று இருந்திருக்கின்றார். அவர் அதில் முழு அளவில் திறமை பெற்று விட்டிருந்த நிலையில் ஸ்ரீ சைலத்தில் இருந்த மல்லிகார்ஜுனா அவருடைய கனவில் தோன்றி அவரை அருணாசலத்திற்கு சென்று ஒரு குருவாக இருந்து கொண்டு தன்னிடம் வந்து சேரும் தகுதியான சீடர்களுக்கு அவற்றை போதிக்கும்படிக் கூறினார். அதை அவர் தன்னுடைய குருவான சிவானந்த தீட்சதரிடம் கூறிய பொழுது அவர் மகிழ்ச்சியுடன் குகை நமச்சிவாவுக்கு ஆசி கூறி அந்தக் கட்டளையை ஏற்று நடத்தும்படிக் கூற குதிரை ஒன்றில் அமர்ந்து கொண்டு திருவண்ணாமலையில் இருந்து அருணாசலத்திற்கு குகை நமச்சிவா பயணம் ஆனார்.

தன்னை விருபாஷ்ச குகை என்று கூறிக் கொண்ட விருபாஷ்ச தேவர் அவரை வழியில் சந்தித்து அவருடன் தானும் சென்றார் என்ற ஒரு நம்பிக்கை திருவண்ணாமலையில் உண்டு. பல சமயங்களில் இரமண மகரிஷி தன்னுடைய பக்தர்களிடம்



குகை நமச்சிவாயா ஆலயத்தின் மேல் பகுதியில் உள்ள கோபுரம்



தாங்கள் இருவரும் கர்நாடகத்தில் இருந்து வந்த இரண்டு வீரசைவர்கள் எனவும் இருவரும் இணைந்தே திருவண்ணாமலைக்கு வந்ததாகவும் கூறி உள்ளாராம். அவர்கள் இருவரும் சிவானந்த தீட்சதருக்கு பன்னிரண்டு வருடங்கள் சேவை செய்து உள்ளனர். விருபாஷ்ச தேவா அந்த விருபாஷ்ச குகையில் இருந்திருக்கின்றார் என்பதைத் தவிற வேறு எந்த தகவலும் அவரைக் குறித்துக் கிடைக்கவில்லை. அவர் மரணம் அடைந்ததும் அவருடைய உடலை சாம்பலாக்கிக் கொண்டார் ( வீபுதி) என்ற செய்தி மட்டுமே நிலவுகின்றது. அந்த வீபுதி இன்றும் அந்த குகைக்குள் வைக்கப்பட்டு அதற்கு தினமும் பூஜைகள் செய்யப்படுகின்றன.

திருவண்ணாமலையை நோக்கி வந்து கொண்டு இருந்த குகை நமச்சிவாயா வழியில் ஒரு கிராமத்தில் திருமணம் நடை பெற்றுக் கொண்டிருந்த இடத்திற்கு சென்றார். அந்த வீட்டு சொந்தக்காரர் அவரை அன்புடன் வரவேற்று அவருக்கு பூஜைகள் செய்தார். பூஜை முடிவில் அங்கிருந்த அனைவருக்கும் குகை நமச்சிவாயா வீபுதி தந்தார். அந்த நிகழ்ச்சி நடந்த சற்று நேரத்திற்கெல்லாம் அந்த வீடு தீப்பிடித்து எரிந்து விட்டது. அங்கிருந்த பலரும் அந்த யோகி தந்த வீபுதியினால்தான் வீடு தீ பற்றிக் கொண்டு விட்டது என கோபத்துடன் அவர் மீது வசை மாறிப் பொழிந்தனர். அது குகை நமச்சிவாயாவின் மனதை மிகவும் வேதனையில் ஆழ்த்தியது. அவருடைய வருத்தம் எல்லாம் சிவபெருமானுடைய வீபுதி மீது பழி கூறி விட்டனரே என்பதுதான்.

உடனே அவர் சிவபெருமானை நினைத்து தியானத்தில் அமர்ந்து கொண்டு அவரை பிரார்த்திக்க எரிந்து போன வீடு மீண்டும் புதுப் பொலிவோடு அதே இடத்தில் தோன்றி விட அனைவரும் அவர் சிவபெருமானுடைய அவதாரமே என எண்ணி அவரை வணங்கத் துவங்கினர். அன்று முதல் குகை நமச்சிவாயா ஒரு தீர்மானமான முடிவுக்கு வந்தார். இனி எந்த காரணம் கொண்டும் எவர் வீட்டிற்கும் சென்று தங்கக் கூடாது என்பதே அவர் எடுத்த முடிவு.

திருவண்ணாமலைக்குச் சென்ற அவர் தான் எடுத்த சபதத்தின்படியே அங்கிருந்த பொழுது சுற்றி இருந்த காடுகள், ஆலயங்கள் மற்றும் பூங்காக்கள் போன்ற இடங்களில் மட்டும்



குகை நமச்சிவாயா ஆலயத்தின் மேல் பகுதியில் உள்ள கோபுரம்



தங்கினார். அவர் பல மணி நேரம் சிவயோகத்தை செய்தபடி சமாதி நிலையில் இருந்தார். அவர் அருணாசலா ஆலயத்தின் நுழை வாசல் வரை தினமும் சென்றாலும் வீரசைவப் பிரிவினர் என்றதினால் உள்ளே செல்லவில்லை. குகை நமச்சியாவிற்கு அந்த ஆலயத்திற்குள் சென்று வழிபட விருப்பம் இருந்திருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டும் விதத்தில் அந்த ஆலயம் இருந்த திசை நோக்கி கைகளைக் கூப்பியபடிக் கூறுவது உண்டு “அந்த ஆலயத்திற் குள் உள்ளவரை கும்பிடாமல் இருந்தால் நீ நலமாக இருக்க முடியுமா ? ”

சிவக்கிர யோகி என்பவர் குகை நமச்சிவாயா ஆலயத்திற்குள்ளேயே போகாமல் தினமும் அதை நோக்கி எதோ செய்கையை செய்து கொண்டு இருப்பதைக் கண்டார். அதை அவர் வேண்டும் என்றே ஆலயத்தை அவமானப்படுத்தும் விதத்தில் செய்கிறார் என்று எண்ணிக் கொண்டு அவரை தண்டிக்க வேண்டும் எனக் கருதி அவருடைய முதுகில் ஒரு தடியால் ஓங்கி அடித்தார். குகை நமச்சிவாயா தன்னை அடித்தவரை ஏறெடுத்தும் பார்க்காமல், அதற்கு மாறாக தன்னுடைய தீய மனோபாவங்களை விலக்கவே கடவுள் தன்னை தடியால் அடித்திருக்கின்றார் எனப் பொருள் தரும் வகையில் தமிழில் ஒரு வெண்பா பாடினார். குகை நமச்சிவாயாவின் அந்த சாத்வீகமான செயலைக் கண்ட சிவக்கிர யோகி தான் தவறு செய்து விட்டதை உணர்ந்து வருந்தினார்.

அந்த நிகழ்சிக்குப் பிறகு குகை நமச்சிவாயா இனியும் தான் அந்த ஆலயத்திற்குள் நுழையாமல் இருக்கக் கூடாது என எண்ணியபடி அதற்குள் செல்ல முடிவு செய்து ஆலயத்தை நோக்கி நடக்கத் துவங்க திடீர் என அவருடைய குருவான சிவானந்த தீட்சதர் எங்கிருந்தோ பல சீடர்களுடன் அங்கு வந்தார். அவரை அன்புடன் வரவேற்ற குகை நமச்சியாவிடம் ஒரு நண்பனைப் போல குரு பேசினார். அதை விட ஆச்சரியம் தரும் வகையில் சிவானந்த தீட்சதர் தன்னுடைய சிஷ்யர்களுடன் ஆலயத்திற்குள் பிரவேசித்தார், கருவறைக்குச் சென்று அங்கு சிவபெருமானைத் துதிக்கத் துவங்கினார். தன்னுடைய குருவுடன் குகை நமச்சியாவும் ஆலயத்திற்குள் சென்று அவர் செய்தபடியே தானும் செய்தார். மனதில் மகிழ்சி பொங்க கீழே விழுந்து வணங்கி, சிவனை மனம்



குகை நமச்சிவாயா ஆலயத்தின் மேல் பகுதியில் உள்ள கோபுரம்

உருகித் துதித்தப் பின் எழுந்தவர் முன்னால் அவருடைய குருவும் அவருடன் வந்திருந்த சிஷ்யர்கள் எவருமே காணப்படவில்லை. பிரமித்துப் போனவர் சிவலிங்கத்தை நோக்க அதில் அவருடைய குருநாதர் காட்சி அளித்தார். உடனேயே அவர் இப்படிப் பாடினார்

> "அருணகிரிநாதா, அறிவின் அதிபதியே, குரு நமச்சிவாயா என என்னால் அழைக்கப்படுபவரே, பொய்யன், தன்மானம் அற்றவன், மூடன், அறிவற்றவன் போன்ற அனைத்து குணங்களையும் கொண்ட என்னை உன்னிடம் அன்பு காட்டாதவன் என்று நினைத்து கோபம் கொள்ளாதே. என்னை உன்னிடம் அழைத்துக் கொண்டு எனக்கு குருவாக இனி நீயே இருந்து வருவாயா"

குகை நமச்சிவாயா நடந்த அனைத்துமே அந்த ஈசனின் விளையாட்டே என்பதைப் புரிந்து கொண்டு, அந்த நிகழ்ச்சி மூலம் இனி தனக்கு ஆலயத்திற்குள் செல்ல அனுமதி கொடுக்கப்பட்டு விட்டது என்றே கருதினார். வீரசைவத்தில் குருவின் கட்டளையை மீறாமல் இருப்பது அதி முக்கியமானது. எந்த சம்பிரதாயங்களையும் அந்த கட்டளை மீறி இருந்தாலும் கூட அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அதன் பின் அந்த ஆலயத்தின் எதிரிலேயே தங்க முடிவு செய்தார். ஓவ்ஒரு நாளும் அருணாசல சிவன் மீது துதி பாடி அதற்கு மாலை அணிவித்தார். ஒரு மாலையை எடுத்துக் கொண்டு போய் சிவன் சன்னதியில் வைத்து விட்டு வருவார். அதை அவர் இப்படிக் கூறினார்.

> பல முறை நான் அவருக்கு மாலைகளினாலும், பாடல்களினாலும் தோரணம் கட்டினேன். என் நாக்கு பல ஆயிரம் பாடல்களை அவரை நினைத்தப் பாடியது. அனைத்து பிரபஞ்சத்திலும் பரவி உள்ள அந்த சோணாசலாரைக் காண என் போன்ற மூடர்களுக்கு ஆயிரம் கண்கள் வேண்டும்.

அங்கிருந்த பொழுது குகை நமச்சிவாயா உணவுக்காக



குகை நமச்சிவாயா ஆலயத்தின் மேல் பகுதியில் உள்ள கோபுரம்

பிட்சை எடுக்க வேண்டி இருந்தது. அப்படிப்பட்ட எளிய வாழ்க்கை அவருக்கு மிகவும் பிடித்தும் இருந்தது. பிட்சை எடுத்து வந்து சாப்பிட்ட பின் அந்த புனித கோட்டை வாயிலில் வந்து உறங்கி எழுவது என்பதுதான் இன்பகரமான வாழ்க்கை என நினைத்தார். அதற்குப் பிறகு ஒரு நாள் சிவன் அவருடைய கனவில் தோன்றி, அங்கிருந்து போய் எதிரில் உள்ள அந்த மலை மீது உள்ள குகையில் வசித்துக் கொண்டு யோகப் பயிற்சியை செய்து கொண்டு இரு எனக் கட்டளையிட்டார் .

குகை நமச்சிவாயா அந்த கட்டளையை ஏற்றுக் கொண்டு மலையின் கிழக்குப் பகுதியில் இருந்த ஒரு குகையில் சென்று அங்கு வாழத் துவங்கினார். அதனால்தான் அவருக்கு குகை நமச்சிவாயா என்ற அடைமொழிப் பெயர் ஏற்பட்டது. அந்த மலை அப்பொழுது முதல் சாதனாக்கள் செய்யும் இடமாக ஆயிற்று. அதற்கு முன் வீரசைவர்களுடைய லிங்க வழிபாட்டை புரிந்து கொள்வது அவசியம்.

வீரசைவர்களுடைய நம்பிக்கையின்படி ஒவ்ஒருவருடைய இருதயத்திலும் கண்களுக்குத் தெரியாமல் லிங்கம் என்ற சிவபெருமானுடைய ஒளி புதைந்து உள்ளது. அந்த சக்தியைதான் ஒரு குருவானவர் வெளியில் எடுத்து அவர்களுக்கு திட்சை அளிக்கும்பொழுது தரப்படும் லிங்கத்தில் உரு ஏற்றித் தந்து அதை இஷ்டலிங்கம் என்று எண்ணி என ஆராதிக்குமாறு கூறுகின்றார். அருணாசலாவில் முதலில் ஒளிப் பிழம்பாக இருந்த சிவபெருமான், அந்த மலையில் புகுந்து கொண்டு அருணாசலா என்ற மலை உருவம் பெற்றார். இரமண மகரிஷி பலமுறைக் கூறுவதுண்டு, அற்த மலை சிவபெருமானுடைய வாசம் செய்யும் இடமோ, இல்லை அவரைக் குறிக்கும் சின்னமோ இல்லை. அது வீரசைவர்களுடைய இஷ்டலிங்கம் போல அந்த மலையாக சிவபெருமான் லிங்க வடிவத்தில் அவதரித்து உள்ளார். அவர் கூறினார் “ மலை முழுவதுமே புனிதத் தன்மை கொண்டது. எப்படி நமக்கு எல்லாம் ஒரு உடல் உள்ளதோ அதைப் போன்று சிவபெருமான் தன்னை மலையாக காட்டிக் கொண்டு உள்ளார். மலை வடிவில் அவர் காட்சி தரும் அற்புதமான தோற்றம் அது. நம் கண்களுக்குத் தான் தெரிய வேண்டும் என்பதற்காக கருணை



குகை நமச்சிவாயா ஆலயத்தின் மேல் பகுதியில் உள்ள கோபுரம்

கொண்டு தன்னை மலை வடிவில் சிவபெருமான் அந்த இடத்தில்காட்சி தருகின்றார்.

திருவண்ணாமலையின் ஐதீகத்தின்படி ஆலயத்திற்குள் உள்ள அருணாசலேஸ்வரரும் வெளியில் உள்ள மலையும் சிவபெருமான்தான். அதனால்தான் குகை நமச்சியாவின் குருநாதர் அந்த ஆலயத்திற்குள் இருந்த லிங்கத்தில் ஐக்கியமாகி விட்டதைப் போல ஒரு காட்சி தந்ததும், குருவும் அருணாசலாவும் ஒருவரே என்ற உண்மையை உணர்ந்தார். அது அவர் பாடிய பாடலில் நன்கு தெரிந்தது. அதனால்தான் அவர் அந்த மலையை தன்னுடைய குருவான சிவலிங்கம் என மனதில் எண்ணிக் கொண்டு வழிபட்டார். அவர் கூறியதைக் கேளுங்கள்:-

> சிவந்தமலையின் கடவுளான அருணாசலா
> என் எதிரில் உருவம் இல்லாமல் நின்று
> கொண்டிருக்க, என்னுடைய தீய மற்றும்
> நல்ல செயல்களுடன் இருந்த அகம்பாவத்தை
> விட்டொழித்து விட்டு, உள்ளத்தில் மூன்று
> நிலைகளிலும் இருந்த அசுத்தங்களையும்,
> இன்நாள் வரை சேர்த்து வைத்திருந்த
> கர்மாக்களையும் துடைத்தெறிய என்னுடைய
> இதயத்தில் அவரை தெய்வமாக ஏற்றுக்
> கொண்டு விட்டேன்.

பக்தனின் உள்ளத்தில் மூன்று நிலைகளிலும் உள்ள அசுத்தங்களை விலக்கி அவனை துாய்மை படுத்துவது குருவின் கடமையாகும் என்பது வீரசைவத்தில் ஏற்கப்பட்ட தத்துவம். ஆகவே அப்படிப்பட்ட செயலை குகை நமச்சிவாயாவுக்கு அவருடைய குரு செய்து இருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக அப்படிப் பட்ட காரியத்தை அருணாசலா - சிவனே செய்து உள்ளார்.

தன்னுடைய பக்தி உணர்வை முழுமையாக மலை மீது செலுத்தி பெற்ற இன்பத்தை அவர் இஷ்ட லிங்க வழி பாட்டிலோ அல்லது சிவ யோகத்திலோ கூட பெறவில்லை.

> “ விவரிக்க முடியாத அண்ணாமலைக்
> கடவுளையும் அவர் பக்கத்தில் அமர்ந்து



குகை நமச்சிவாயா ஆலயத்தின் மேல் பகுதியில் உள்ள கோபுரம்

கோண்டு உள்ள உண்ணாமலையையும் தவிற எனக்கு வேறு எந்தக் கடவுளும் தெரியாது. ஒருவேளை என்னை அறியாமல் அப்படி தெரிந்து இருந்தாலும் என் உள்ளம் அவர்களிடம் ஈடுபாடு கொள்ளவில்லை. சிவந்த மலை மீது அமர்ந்து உள்ள மன்னனே, உன்னை நான் இரு கரமும் கூப்பித் துதித்து, நீயே அதைத்துக் கடவுட்களிலும் பெரும் கடவுள் என புகழ் பாடி, இதயமே உருகும் வண்ணம் கண்களில் கண்ணீர் வழிந்தோட நின்ற பொழுது நான் கேட்டதை எல்லாம் நீ எனக்குத் தந்தாய். கருணைக் கடவுளே என்னால் அதற்கு என்ன பிரதி பலன் செய்ய முடியும் ? ”

அவருடைய வேண்டுகோள்தான் என்ன ? இனி பிறப்புகளில் இருந்து முத்தி பெற வேண்டும்.

“என் இதயத்தில் உள்ளவரே, மனதில் நிலையாக சித்தரவதை செய்து கொண்டு இருக்கும் வேதனைகளை அழித்து ஒழிக்கும் கருணைக் கடலே, பூமியிலே பிறந்து விட்டவனுக்கு கிடைக்க வேண்டிய பெரும் பாக்கியமான இனி பிறவாமை என்ற வரம் கிடைக்க வேண்டும் என்ற எங்கள் வேண்டுகோளுக்கு பயன் கிடைத்து விட்டது.”

இன்னும் ஒரு பாடலில் அவர் சிவந்த மலையை வேண்டிக் கொண்டதினால் தனக்கு கிடைத்த வரத்தைப் பற்றி இப்படிக் கூறினார்.

“எவரெவரெல்லாம் தமக்கு புகழ், செல்வம் மற்றும் புத்திர பாக்கியம் முதலியன கிடைக்க வேண்டும் என நினைத்தார்களோ அவர்கள் அனைவருமே அந்த சிவப்பு மலை



குகை நமச்சிவாயா ஆலயத்தின் மேல் பகுதியில் உள்ள கோபுரம்



ஆண்டவனை வேண்டுகிறார்கள். தூக்கத்தில் கூட மறக்காமல் எவர் ஒருவர் அந்த தெய்வத்தை வேண்டிக் கொண்டே இருக்கின்றனரோ அவர்களுக்கு அடுத்தப் பிறவி என்பதே கிடையாது.

குகை நமச்சிவாயா தான் கடை பிடித்து வந்த சிவயோகாத்தைப் பற்றி எதுவுமே கூறவில்லை. அவர் திருவண்ணாமலைக்கு வந்த உடனேயே மெல்ல மெல்ல அதை விட்டு விட்டார். அவருடைய எண்ணப்படி சிவனிடம் ஒருவன் முழுமையாக சரண் அடைந்து விட்டால் வேறு எதுவுமே தேவை இல்லை. அவருடைய தெய்வ வழிபாடு தனிமையானது. அவருடைய சிஷ்யரான குரு நமச்சிவாயாவின் செய்தியின்படி அவருடைய குருநாதர் தினமும் நான்கு வரி பாடல்களை அருணாசல சிவபெருமான் மீது பாடி வந்தார். அவர் எழுதினார் " மிகவும் எளிமையான குகை நமச்சிவாயா தான் வணங்கி வந்த அந்த மலை மீது திளமும் நான்கு வரி வெண்பாக்களால் மாலை அணிவித்து வந்தார். "

அவர் மலை குகைக்குள் சென்று வசிக்கத் துவங்கும் முன்னரே, அதாவது தினமும் ஆலயத்தின் வாசல் வரை சென்று திரும்ப ஆரம்பித்ததில் இருந்தே அந்த பழக்கத்தை துவங்கினார். அவர் பல்லாயிரக்கணக்கான பாடல்களை இயற்றி இருந்தாலும் ஒரு சில பாடல்களே காப்பாற்றப்பட்டு வந்துள்ளன. அவற்றில் இரண்டு பாடல்கள் மட்டும் வெளியாகி உள்ளன. நூறு செய்யுட்கள் அடங்கிய பாடல் ஒன்று அருணகிரி அந்தாதியிலும், முப்பத்தி ஆறு செய்யுட்கள் அடங்கியது திருவருணை வெண்பா என்பதிலும் வெளி ஆகி உள்ளன. சில எழுத்தாளர்கள் எழுதிய படைப்புக்களில் அவருடைய பாடல்கள் வெளி ஆகி உள்ளன என்றாலும் அவருடைய பெரும்பாலான படைப்புக்கள் அழிந்து விட்டன என்றே எண்ணத் தோன்றுகின்றது.

அவர் கர்னாடகத்தில் பிறந்து இருந்தாலும், தாய் மொழி கன்னடமாக இருந்தாலும் அவர் தமிழில் புலமைப் பெற்று இருந்தார். அவருடைய அருணகிரி அந்தாதி இன்றும் தமிழக பாடப் புத்தகங்களில் இடம் பெற்று உள்ளதே அதன்



குகை நமச்சிவாயா ஆலயத்தின் மேல் பகுதியில் உள்ள கோபுரம்

பெருமைக்குச் சான்று. அவர் இயற்றிய செய்யுள் இதுவரை எழுதப்பட்டு உள்ள செய்யுட்களிலேயே மிகவும் கடினமானது என இரமண மகரிஷி பலமுறை கூறி உள்ளார். குறிப்பு எதுவும் எழுதி வைத்துக் கொள்ளாமல் தன் இச்சையாக பாடல்களை இயற்றி வந்த மிகவும் புகழ் பெற்ற கணபதி முனி என்பவர் அந்த பாடல்கள் தன்னால் எளிதில் உபயோகித்துக் கொள்ள முடியாத அளவு கடினமாக இருந்ததாக ஒப்புக் கொண்டார். 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த தண்டபாணி ஸ்வாமி என்பவர், குகை நமச்சிவாயாவுடைய பாடல்கள் அத்தனை அற்புதமாக அமைந்து உள்ளதின் காரணம் அதை இயற்றும் ஆற்றலை தெய்வம்தான் அவருக்கு தந்து இருக்க வேண்டும் எனக் கூறினார். குகை நமச்சிவாயா பற்றி எழுதிய குறிப்பில் “கன்னடத்தைத் தவிற வேறு மொழி படித்தறியாத அவருக்கு தமிழ் மொழி வல்லுனர்களுக்கு இணையாக செய்யுள் படைக்கும் திறனை என்னுடையக் கடவுள் சிவபெருமான் தந்துள்ளார் என்பதுதான் உண்மை. நிச்சயமாக அந்த ஆற்றல் அவருடைய முயற்சியினால் வந்திருக்க முடியாது.

அந்த பாடல்களை இயற்றியதைத் தவிற குகை நமச்சிவாயா தினமும் அந்த மலையை “ நமஹா, சிவாய ” என்று துதித்துக் கொண்டே பிரதக்ஷணம் செய்து கொண்டு இருந்தார். அவரைப் போலவே எப்பொழுதும் அருணாசிலா நினைவுடன் மற்றவர்களும் அப்படி செய்ய வேண்டும் என அறிவுறைக் கூறி வந்தார்.

“ புனித அருணாசல மலையை தினமும் பிரதக்ஷணம் செய்து தன்னை முழுமையாக எவர் அவரிடம் இணைத்துக் கொள்கின்றனரோ அவர்கள் புகழ் மிக்கவர்களை விட மேலும் புகழ் பெறுவார்கள். மலை நாயகனான அந்த ஐந்து எழுத்து பெயர் கொண்டவனின் நாமத்தை ஒரே நினைவுடன் தியானித்த வண்ணம் இருக்கும் ஒருவனுக்கு அவன் விரும்பிய அனைத்தும் கிடைக்கும். ருத்திராட்ச மணிகளை வைத்துக் கொண்டு அதை உருட்டியவண்ணம் ஐந்தெழுத்து மந்திரமான நமச்சிவாயாவை உச்சரிக்க வேண்டும். பாம்பை தன் கழுத்தில் சுற்றிக் கொண்டு உள்ள அந்த சோணாசலேஸ்வரரை சரண் அடைந்தால் என்றும்



குகை நமச்சிவாயா

GUHAI NAMACHIVAYA



குகை நமச்சிவாயா ஆலயத்தின் மேல் பகுதியில் உள்ள கோபுரம்

பிறவாமை என்ற வரம் நிச்சயம் கிடைக்கும். இருதயமே அந்த சிவந்த நிறமலையானை உன் உள்ளத்தில் வைத்து பூஜித்துக் கொண்டு இருந்தால், அவர் இதோ நான் உன் உள்ளத்தில் உள்ளேன் என்பதை காட்டும் விதத்தில் உன்னுடைய அனைத்து கர்மாக்களின் வினைகளும் அகன்று போவதைக் காணலாம்."

குகை நமச்சிவாயா அருணாசலத்தாரிடம் அத்தனை பக்தி கொண்டு இருந்தாலும் மிகவும் கோபம் அடைந்து விடுவார் என்பதை விவரிக்கும் வகையில் அமைந்து உள்ளது இந்த கதை. ஒரு முறை ஒரு ஏழையுடைய ஆடு கர்பமுற்று குட்டி போடும் முன்பு ஒரு நாள் அது பாம்பு கடித்து இறந்து விட்டது. வருத்தம் அடைந்த அவனிடம், அந்த ஆட்டை தன்னிடம் விட்டுவிட்டு மறு நாள் வந்து எடுத்துப் போகுமாறு குகை நமச்சிவாயா கூறினார். அதை எடுத்துப் போக வந்தவன் அந்த ஆடு மட்டும் அல்ல அதன் வயிற்றில் இருந்த இரண்டு ஆட்டுக் குட்டிகளும் உயிர் பிழைத்து விட்டிருந்ததைக் கண்டு மகிழ்ந்தான். அந்த அற்புதம் வெளியில் பரவியது. உள்ளூரில் இருந்த சில நெசவாளர்கள் அதை கேலியாக பேசினர். அவர்களில் ஒருவன் இறந்து விட்டவன் போல நடித்தபடி கீழே கிடக்க மற்றவர்கள் அவனை குகை நமச்சிவாயாவிடம் தூக்கிச் சென்றனர். தன்னை கேலி செய்கிறார்கள் என்பதைக் கண்டு பிடித்து விட்டு கோபமுற்ற குகை நமச்சிவாயா அவர்களுக்கு சாபமிட இறந்தவன் போல நடித்தவன் உண்மையிலேயே இறந்து விட்டான். அது மட்டும் அல்ல திருவண்ணாமலையில் நெசவாளிக் குடும்பங்கள் எவருமே அங்கு செழிக்க முடியாது என சாபம் இட்டு விட சில நாட்களிலேயே திருவண்ணாமலையில் இருந்த அனைத்து நெசவாளிகளும் இனம் புரியாத பல காரணங்களினால் நஷ்டம் அடைந்து தொழிலை விட்டுவிட்டு வேறு தொழில்களை ஏற்க வேண்டியதாயிற்று. எத்தனை முயன்றும் அதற்கு அடுத்த வருடத்திலும் கூட அந்த நெசவுத் தொழிலை அவர்கள் மீண்டும் அங்கு துவக்க முடியவில்லை.

அவருடைய கோபத்தைக் காட்டும் மற்றும் ஒரு கதை உண்டு. ஒரு முறை அகிட்டு என்ற கொடுங்கோல் மன்னன் அந்த ஊரின் மீது படை எடுத்து அந்த ஊரை கொள்ளை அடித்தான்.



குகை நமச்சிவாயா ஆலயத்தின் மேல் பகுதியில் உள்ள கோபுரம்

பலரைக் கொன்று குவித்தப் பின் பல பெண்களை கடத்திச் சென்றான். வேண்டும் என்றே அந்த ஆலயத்தில் உயிருடன் இருந்த எருது ஒன்றை தீயில் பொசுக்கினான். அதைக் கேள்விப்பட்ட குகை நமச்சிவாயா கோபம் கொண்டு சிவனிடம் வேண்டினார்.

> “ சோணேஷ்வரா உன்னுடைய மூன்று கண்களுமா உறங்கி விட்டன ? உன்னிடம் உள்ள கோடாரியையும் திரிசூலத்தையும் எவராவது திருடிக் கொண்டு போய் விட்டனரா ? தன்மானத்தையும் நீ இழந்து விட்டாயா ? சாபத்தினால் மரணம் அடைபவர்கள் போல உன்னுடைய பக்தர்கள் அனாதைகளாக கிடக்க வேண்டுமா ?

அருணாசலேஸ்வரர் அவருடைய குற்றச் சாட்டுகளுக்கு மதிப்பு அளிப்பது போல அன்று இரவு அகிட்டுவின் கனவில் ஒரு சாது போலத் தோன்றி அவரை முதுகில் ஒரு தடியால் அடித்தார். அவன் முதுகில் மறுநாள் பெரிய கட்டி தோன்றி தொல்லைப் படுத்தத் துவங்க அவன் உள்ளூர் மூத்தவர்களை ஆலோசனைக் கேட்டான். அவன் கனவை கேட்டறிந்தவர்கள் அவன் சில நாட்களிலேயே இறந்து விடப் போவதாகவும் அதைத் தடுக்க வேண்டும் எனில் அந்த ஆலயத்தை சீர் செய்து விட்டுப் போய் வீடும்படி அறிவுறைக் கூற அவனும் சற்றும் தயங்காமல் அந்த ஆலயத்தைப் புதுப்பித்து விட்டு அங்கிருந்து சென்று விட்டான். ஆனாலும் குகை நமச்சிவாயாவின் சாபம் வீண் போகவில்லை. அவனுடைய வியாதி முற்றிப் போய் கட்டியில் சீழ் பிடித்துப் புழுக்கள் நெளியத் துவங்கியது. என்ன முயன்றும் அதைக் குணப்படுத்த முடியவில்லை. அதை குணப்படுத்த கட்டியின் மீது தான் கொன்று குவித்த கர்பிணிப் பெண்களின் வயிற்றில் இருந்து எடுத்த சிசுக்களை வைத்துக் கட்டியும் வியாதியை குணப்படுத்த முடியவில்லை. முடிவாக அவன் பெரும் அவதிப்பட்டு துன்புற்று துடித்துச் செத்தான். அவன் இறந்தவுடன், தலைக்கு எண்ணைத் தேய்த்துக் குளித்து, புத்தாடை அணிந்து பெரும் விழாவாக உள்ளூரில் இருந்தவர்கள் கொண்டாடி, விருந்து உண்டனர்.



குகை நமச்சிவாயா ஆலயத்தின் மேல் பகுதியில் உள்ள கோபுரம்

பிரும்மா உயிர் வாழ மனிதனுக்கு நூறு வயதையே நிர்ணயித்து இருந்ததினால் தனக்கும் பிரும்மா கொடுத்த நூறு வயது ஆயுள் முடிந்து விட்டதினால் இனி வாழ்ந்தது போதும் என்ற முடிவிற்கு குகை நமச்சிவாயா வந்தார்.

தன்னுடைய சீடர்களிடம் கூறி ஒரு சமாதி குழியை தோண்டச் செய்து அதற்குள் இறங்கிய அவர் முன் சிவபெருமான் காட்சி அளித்து இன்னும் நூற்று வருடங்கள் அவர் உயிருடன் இருக்க வேண்டும் எனக் கட்டளை இட அவர் பாடினார்

> "நூறு வயதாகி விட்ட நான் இறந்து போக வேண்டுமா இல்லை எனில் இந்த அழியப் போகும் உடலில் வியாதிகளுடன் நான் அவதிப்பட்டுக் கொண்டு இருக்க வேண்டுமா என்பதை, என் தந்தையையும் தாயையும் விட என்னிடம் அன்பு செலுத்திய அருணகிரிதான் முடிவு செய்து கட்டளை இடவேண்டும். "

நூறு வருடங்களுக்குப் பிறகு அவர் இன்னொரு சமாதிக் குழியை அந்த குகைக்குள் தோண்ட வைத்தார். அதில் அவருடைய பெயர் பொறிக்கப் பட்டு உள்ளது. அதில் இறங்கும் முன் அவர் இரண்டு பாடல்களை இயற்றினார்.

> நான் இனிமேலும் இந்த மாயையான உடலில் ஒட்டிக் கொண்டு இருக்க விரும்பவில்லை. இங்குதான் நம் விஞ்சானத்தில் கண்டு பிடிக்கப்பட்டு உள்ள 360 வித வியாதிகளும் அடைக்கலம் ஆகி உள்ளன. புனித நீரையும் பிறை வடிவ சந்திரனையும் உன் தலையில் முடிந்து வைத்துக் கொண்டு உள்ள அருணேசா, உன்னுடைய ஒரே பக்தனான என்னுடைய பிறப்பை உடனே அழித்து விடுவாயா ? சோணகிரி என்ற எங்களுடைய தந்தைப் போன்ற உன் கால்களில் நாங்கள் சரண் அடைந்து விட்டோம். நாங்கள் மூன்று காலத்தையும் கடந்து விட்டு கடைசி பிறப்பில் வந்து விட்டோம். நன்கு கவனித்துப் பார், இனி நாங்கள் எருது மேல் ஏறி வரும் யமதர்மனிடமோ , தாமரையில் அமர்ந்து இருக்கும் பிரும்மாவிடமோ தலை குனிய வேண்டியது இல்லை.

அப்படிக் கூறிய பின் அவர் சமாதி குழியில் இறங்கி மலர்ந்த தாமரைப்



குகை நமச்சிவாயா ஆலயத்தின் மேல் பகுதியில் உள்ள கோபுரம்

போல அமர்ந்த பின் சிவயோகாசிரமத்தை பயன் படுத்தி தன்னுடைய பிராணாவை தலை மீது இருந்த பிரும்மாந்திரா வழியாக ( தலையில் இருந்த சக்கரம் ) செலுத்தி அதை உடலை விட்டு வெளியேற்றினார். அவருடைய சீடர்கள் அந்த இடத்தில் ஒரு சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து பூஜித்து வருகின்றனர். அன்றில் இருந்து இன்றுவரை அந்த இடத்தில் தினப் பூஜைகளும் வழிபாடுகளும் நடந்து வருகின்றன.



குகை நமச்சிவாயாவின் சமாதி

இப்படியாக அந்த மலைக் கடவுள் மீது தன்னலமற்ற அபாரமான பக்தி கொண்டவர்களுடைய அனைத்து கர்ம வினைகளும் அகன்று போகும் என்ற சாதாரணமான உண்மையை எடுத்துக் காட்டியவண்ணம் வாழ்ந்து கொண்டு இருந்த அருணாசல பக்தரின் வாழ்வு முடிந்தது.

" நான் என் துயரங்களையும் எண்ணற்ற வினைகளையும் களைந்து எறிய ஒரு வழி கண்டு பிடித்து விட்டேன். எனக்கு வேறு என்ன தேவை ? என் இதயத்தில் அந்த சிவந்த நிற மலையாண்டவனுடைய தாமரை மலர்களைப் போன்ற பாதங்களை எடுத்து வைத்துக் கொண்டு விட்டேன். பாவங்களைக் களைந்தெறிய அந்த சிவந்த நிற மலையாண்டவனை துதிக்காத இழிவான உடல் ஒருவனுக்கு இருந்தென்ன பயன் ? நமக்கு நல்லதோ , தீமையோ எது நடந்தாலும் சரி , அந்த சோணேசனைத் துதித்து அவனிடம் நம்பிக்கைக் கொள்வது நம் கடமை. "



# குகை நமச்சிவாயா
# GUHAI NAMACHIVAYA

**(Parts of this article were first published in *The Mountain Path*, 1990 pp. 115- 23**
**இந்த கட்டுரையின் சில பகுதிகள் முதலில் மலை வழி-1990, பக். 115 -23 என்ற இதழில் வெளியாயிற்று)**

**மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்**
**டேவிட் காட்மன்**

**Original in English**
**DAVID GODMAN**

**தமிழ் மொழி பெயர்ப்பு**
**சாந்திப்பிரியா**
**(nrj_1945@yahoo.com)**

**Tamil Translation**
**SANTHIPRIYA**
**(nrj_1945@yahoo.com)**

